## புத்தசாசன , சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு ஆரம்ப மட்டத்திலான (தொழில்நுட்பம் சாராத)(PL – 1) தொல்பொருளியல் உதவியாளர் தரம் III / காவலாளி தரம் III ஆகிய பதவிகளுக்கான வெற்றிடம் நிரப்புதல்

தொல்பொருளியல் திணைக்களத்திற்கு உரியதான நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள தொல்பொருளியல் இடங்களில் தற்போது வெற்றிடங்களாக உள்ள ஆரம்ப மட்டத்திலான (தொழில்நுட்பம் சாராத) (PL – 1) தொல்பொருளியல் உதவியாளர் தரம் III / காவலாளி தரம் III ஆகிய பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | திறந்த அடிப்படையில் உருவாகியுள்ள வெற்றிடங்கள் |
|---|---|
| (i). தொல்பொருளியல் உதவியாளர் தரம் III | 191 |
| (ii). காவலாளி தரம் III | 324 |

02. **சம்பள அளவுத் திட்டம்** - 2025.03.25 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பொது நிருவாக சுற்றுநிருப இலக்கம் 10/2025 இன் பிரகாரம் (PL – 1) இற்கு அமைவாக ரூபா 40,000 –10 x 450 –10 x 490 – 10 x 540 –12 x 590 – 61,880/- எனப்படும் சம்பள அளவுத் திட்டம்

03. **கல்வித் தகைமைகள்** - கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழில் தகைமைகள்** - உரிய துறைகளில் தொழில் தகைமைகளைக் கொண்டிருத்தல் விசேட தகைமைகளாகக் கருதப்படும்.

**அநுபவங்கள்** - உரிய துறைகளில் அநுபவங்களைக் கொண்டிருத்தல் விசேட தகைமைகளாகக் கருதப்படும்.

**உடற் தகைமைகள்** - அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் உரிய பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது** - **ஆகக் குறைந்த எல்லை** : 18 வயதிற்குக் குறையாத
**ஆகக் கூடிய எல்லை** : 45 வயதிற்கு மேற்படாத

- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**ஏனையவை**

i. கடந்த ஐந்து வருடத்தினுள் குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். (அதனை அப்பிரதேச கிராம அலுவலர் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.)

ii. விண்ணப்பதாரி சிறந்த நல்லொழுக்கத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

iii. குறித்த பதவிகளுக்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட தகைமைகள் அனைத்தையும் விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## குறிப்பு

*(அ)* **கல்வித் தகைமைகள் தொடர்பாக,**

* இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்குரிய பாடத்திட்ட வகுப்பீடுகளுக்கு அமைவாக 41,44 ஆம் இலக்க பாடத்திட்டத்திற்குரிய விஞ்ஞான பாடங்கள் இரண்டில் ஒன்று எனவும், 42,45 ஆம் இலக்க பாடத்திட்டத்திற்குரிய கணித பாடங்கள் இரண்டில் ஒன்று எனவும் கணிக்கப்பட்டு பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கைகள் தீர்மானிக்கப்படும்.

* க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தொழில்நுட்பம் பாடத்திற்கான எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி பெறாதிருப்பின் (குறித்த பாடத்திற்கான செயல்முறைப் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பினும்) முழுமையாக்கப்படாத பாடமாகக் கருதி சித்தி எய்தவில்லை என்பதாகத் தீர்மானிக்கப்படும்.

* விருப்புக்குரிய சிங்களம், விருப்புக்குரிய தமிழ், விருப்புக்குரிய ஆங்கிலம் போன்ற பாடங்கள் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் உள்ளடக்கப்படாத பாடங்கள் என்பதனால் அப்பாடங்களில் பெற்றுள்ள சித்திகள் கணக்கிலெடுக்கப்பட மாட்டாது.

### 04. ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை

(அ) .மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக சீரமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாக புள்ளிகள் வழங்கப்படவுள்ளதுடன், தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரர்கள் குறித்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். தகுதியுள்ளவர்களாகத் தெரிவு செய்வதற்கு குறித்த நேர்முகப் பரீட்சையில் 40% வீதத்திற்கும் அதிகமான புள்ளிகளைப் பெறல் வேண்டும். பெற்றுக் கொள்ளப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படியும், பெற்ற புள்ளிகளின் வரிசைக் கிரம ரீதியாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்பவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

(ஆ). சீரமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக உரிய புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| i. | கல்வித் தகைமைகள் | 20 புள்ளிகள் |
| ii. | விளையாட்டுத் தகைமைகள் | 10 புள்ளிகள் |
| iii. | பதவிக்குரிய துறையில் பெற்றுள்ள அநுபவங்கள் | 45 புள்ளிகள் |
| iv. | தொல்லியல் சங்கங்கள் உட்பட தன்னார்வ சங்கங்களில் அங்கத்துவம் வகித்தல் | 05 புள்ளிகள் |
| v. | ஏனைய தொழில் தகைமைச் சான்றிதழ்கள் | 15 புள்ளிகள் |
| vi. | தேகாரோக்கியம் | 05 புள்ளிகள் |

### 05. சேவையலமர்த்துவதற்கான பொது நிபந்தனைகள்.

(அ). இப்பதவிகள் நிரந்தரமானவை. உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய சம்பள முறைகள் தொடர்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். பொது நிபந்தனைகளுக்கும், 2011.09.15 ஆந் திகதிய அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொல்பொருளியல் திணைக்களத்தில் ஆரம்ப நிலை தொழில்நுட்பம் சாராத ஊழியர்கள் தரத்தின் PL-01 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்துள்ள படிமுறைகளுக்கு அமைவான அனைத்து நிபந்தனைகளுக்கும், குறித்த ஆட்சேர்ப்பு படிமுறைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள அல்லது

எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து திருத்தங்களின் போதான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுகின்றவாறு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் *(PL-01) III* ஆம் தரத்தில் பதவி நியமனம் செய்யப்படுவார்கள்.

(ஆ). விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(இ). மிகச் சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்

(ஈ). ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குக் கட்டுப்பட்டவராவர்.

06. விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் ஆவணங்களது சாயல் பிரதிகளைத் தமது விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும். (மூலப்பிரதிகள் அல்ல.)

- (அ). பிறப்புச் சாட்சிப் பத்திரம்
- (ஆ). நல்லொழுக்கம் தொடர்பாக அண்மையில் பெற்றுக் கொண்ட நற்சான்றிதழ். (உறவினரல்லாத ஒருவரிடமிருந்து)
- (இ). கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்கள்.
- (ஈ). வதிவினை உறுதிப்படுத்துகின்ற கிராம அலுவலரின் சான்றிதழ்.
- (உ). விளையாட்டுகளில் அதிகூடிய தகைமைகளைப் பெற்றதற்கான சான்றிதழ்கள்.
- (ஊ). ஏனைய தொழிற் தகைமைகளுக்கான சான்றிதழ்கள்.
- (எ). தொழில் அநுபவங்கள் தொடர்பான சான்றிதழ்கள்.
- (ஏ). தேசிய அடையாள அட்டையின் சாயல் பிரதி.

07. ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தை உரிய திணைக்களத் தலைவரின் ஊடாகவும், ஏனைய விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தை மத குருமார், சமாதான நீதவான், அரச பாடசாலை அதிபர் அல்லது ரூபா 985,800 விற்குக் குறையாத ஆரம்பச் சம்பளத்தைப் பெறும் அரசாங்க அலுவலர் ஆகியோரில் ஒருவர் மூலமாகவும் அத்தாட்சிப்படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும்.

08. இங்கே கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை ஒத்தவாறு தமது விண்ணப்பத்தைத் தயாரித்து, பணிப்பாளர் நாயகம், தொல்பொருளியல் திணைக்களம், த.பெ. இலக்கம் 532, சேர் மார்க்கஸ் பிரனாந்து மாவத்தை, கொழும்பு 07 என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்புகின்ற தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும். தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 2026.07.06 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் அல்லது குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்குப் புறம்பாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் யாவும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

09. எவரேனுமொரு விண்ணப்பதாரி குறித்த தகைமைகளை மதிப்பீடு செய்கின்ற நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குத் தகுதியற்றவரெனத் தெரிய வருமிடத்து, அதாவது நேர்முகப் பரீட்சைக்கு முன்னதாகவோ அல்லது நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்திலோ அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னரோ தெரிய வருமிடத்து, அவரது விண்ணப்பம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரிந்து கொண்டே வழங்கியுள்ளமை தெரிய வரின், அல்லது ஏதேனுமொரு முக்கியமான தகவலை வேண்டுமென்றே மறைப்பவராக இருப்பின் அவர் அந்நியமனத்திலிருந்து நீக்கப்படலாம்.

10. குறித்த வெற்றிடங்கள் நிரப்புதல், நிரப்பாது இருத்தல் அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படுகின்ற இறுதித் தீர்மானங்கள் தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தின் வசமுள்ளது.

ඊ.ඒ. සෙනරත් වික්‍රමසිංහ
පුරාවිද්‍යා [illegible] ජනරාල් (වැ.බ)
පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුව
ශ්‍රීමත් මාර්කස් ප්‍රනාන්දු මාවත
කොළඹ 07.

ஈ. ஏ. செனரத் விக்கிரமசிங்ஹ
தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம் (பதிற் கடமை)

2026, ஜுன் மாதம் 06/03 ஆந் திகதி
தொல்பொருளியல் திணைக்களம்
கொழும்பு 07.